ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2081/47 - 2018 ජූලි මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.07.26
*2081/47 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: YAK/LAND/01/03/15.
எனது அமைச்சின் இல.: 4-3/7/2016/HW/321.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்துவ வடக்கு யக்கலமுல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 181, வல்பொல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைபட இல. 645 (தொகுதி இல. 19, தாள் இல. 22) இல் துண்டு இல. 963, 964, 965, 966 எனக்காட்டப்பட்ட 0.0123 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட இருபத்தி நான்கு (24) காணித் துண்டுகள் :

**1. துண்டு இல. 963**
காணியின் பெயர் : கலுகந்தவத்த; விபரம் : திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : டபிள்யு. கே. கருணாபால, இஹலவல்பொல, இமதுவ; விஸ்தீரணம் : 0.0013 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 964**
காணியின் பெயர் : பதிராஜகேவத்த; விபரம் : வீட்டுத்தோட்டம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : எம். கே. பி. கல்யாணவங்ச; விஸ்தீரணம் : 0.0076 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 965**
காணியின் பெயர் : பதிரணகேவத்த; விபரம் : வீட்டுத்தோட்டம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : எம். கே. பி. கல்யாணவங்ச ஜயந்தி, இஹல பள்ளம, இமதுவ; விஸ்தீரணம் : 0.0014 ஹெக்டயார்.

**4. துண்டு இல. 966**
காணியின் பெயர் : கோன்கஸ்கொடவத்த, கெடிகலஓகந்த, வெரலியமுல்லகொட, மில்லகஹவத்த, தெபொலகொடவத்த; உரிமை கோருவோர் : அரசு; விபரம் : வீட்டுத்தோட்டம், சீமெந்தினால் கட்டப்பட்ட ஒரு பகுதி உள்ளது; ஆரம்ப உரிமை கோருவோர் : எச். கே. லீலாவதி, ஜயந்தி, இஹலவல்பொல, இமதுவ; விஸ்தீரணம் : 0.0020 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு யக்கலமுல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர்


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சந்திம சீ. முஹந்திரம்கே,
பிரதேச செயலாளர் ,
யக்கலமுல்ல.

பிரதேச செயலகம்,
யக்கலமுல்ல,
2018,யூலை 02.

8 - 466

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 3/6/2016/15-1/2018.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2016/எச்டபிள்யூ/36.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணத்தில், குருநாகலை மாவட்டத்தில், பொல்கஹவலை பிரதேச செயலாளர் பிரிவில், உடபொல மெதலஸ்சே கோரலை சிறுபிரிவில், இல. 889, லிஹினிகிரிய கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட லிஹினிகிரிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை மா அதிபரால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. 2399 இல் குறிப்பிடப்படுகின்ற 0.1234 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட கீழே காட்டப்பட்டுள்ள விபரங்களுக்குறிய காணித்துண்டுகள்:

1. **துண்டு இல. 01**

காணியின் பெயர்: மஹவத்தை; விபரம்: தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: அதிகாரி முதியன்சேலாகே மொரினி குசலிதா பண்டார (வ. மீ 812); விஸ்தீரணம்: 0.0812 ஹெக்டயார்.

2. **துண்டு இல. 02**

காணியின் பெயர்: மஹவத்தை; விபரம்: தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: ரனதுங்க ஜயசேகர கோரலகே சீலவதீ (வ. மீ. 422); விஸ்தீரணம்: 0.0422 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு பொல்கஹவலை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ. எம். ஜீ. கே. விஜேசூரிய,
பிரதேச செயலாளர்,
பொல்கஹவலை.

பிரதேச செயலகம்,
பொல்கஹவலை,
2018, யூலை 02.

8 - 467

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.